தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 19, யுவ–திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மே 2, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

***"எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து"***

கயவர்கள் எதற்குத் தகுதியுள்ளவர்கள் என்றால், தமக்கு ஏதேனும் ஒரு துன்பமோ, குறைபாடோ ஏற்பட்டுவிட்டால் உடனே தம்மை விலைபேசி பிறரிடம் விற்றுவிடுவதற்குத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 501, டாக்டர் எம். மோசஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் 502, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

502—

மலைவாழ் மக்களுக்கு சாதிச்சான்றிதழ் வழங்குதல்

* **33113** - *திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை வாழ்மக்களுக்கு சாதிச்சான்றிதழ் வழங்க காலதாமதம் ஆவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலை, ஏலகிரியில் மலைவாழ் மக்களுக்கு சாதிச்சான்று வழங்குவதில் காலதாமதம் எதுவும் ஏற்படுவது இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பு ஏற்று, இந்த 4 ஆண்டுக் காலத்திலே இந்தியாவின் எந்த முதல் மந்திரியும் சாதிக்க முடியாத பல அற்புத சாதனைகளைப் படைத்துவரும், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலையில் இந்த 4 ஆண்டுக் காலத்தில் மட்டும் சாலை வசதிகள், ரோடு வசதிகள், பஸ் வசதிகள், தண்ணீர்ப் பிரச்சினைகள், இப்படிப் பல பிரச்சினைகளைத் தீர்த்து வரும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாதிச் சான்றிதழ் பற்றி மட்டும் கேள்வி கேளுங்கள்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: இருப்பதால் மலைவாழ் மக்கள் சாதிச் சான்றிதழ் கேட்டால் திருப்பத்தூர் சப் கலெக்டரேட்டில் மிகவும் காலதாமதம் செய்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிச் சான்று என்பது நிரந்தரமான ஒன்று. ஆகையால் இது பற்றிப் பலமுறை நான் இந்த அவையிலேயே தெரிவித்திருக்கிறேன். அறிக்கை மூலம் தெரிவித்திருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் இதை விவரம் தெரியாதவர்களுக்குச் சொல்ல வேண்டிய ஒரு பிரச்சினை. அவர்கள் சொன்னார்களா, இல்லையா என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை. ஆனால், மற்றவர்களுக்கு இதைச் சொல்லாவிட்டாலும், இதைச் சொல்லவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் அல்ல. இன்றைக்குச் சாதிச் சான்று வருகிறபோது, கல்வி

ஆண்டுகளில் அதற்காகத் தனியாக அதிகாரிகளைப் போட்டு, எவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்க ஆணையைப் பிறப்பித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி. இவருடைய கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு முறையாக 28-4-1995 அன்று கொண்டு வரப்பட்டது. அன்றே, புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட வேண்டும் என்று உத்திரவிட்டார்கள். அன்றே ஆணையிடப்பட்டது. அன்றே என்றால் 28-4-1995. அதன்படி, தொட்டிநாயக்கர் மற்றும் அதற்குள்ளடங்கிய ராதாகம்பளம், கொல்வார், சில்வார், தொக்குவாளர் மற்றும் தொழுவை நாயக்கர் ஆகிய வகுப்பைச் சேர்ந்த அனைவருக்கும் இதுவரையிலும் கோட்டாட்சியரைக் கொண்டு சாதிச் சான்றிதழ் கொடுத்து வருகிறார்கள். 28-ஆம் தேதியிலிருந்து அந்தந்த வட்டாட்சிகளில் கொடுப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 503, 504, 505 மற்றும் 506 ஆகிய வினாக்கள் மாண்புமிகு அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 507, திரு. கே. ஏ. மனோகரன் மற்றும் திரு. மு. வெங்கடராம ரெட்டி. இருக்கையில் இல்லை.

வினா எண் 508, திரு. வீ. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வினா எண். 509. திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

முற்பகல் 10-05

509—

திருவட்டார் பேரூராட்சியில் மின்மாற்றி அமைத்தல்

*** 24657** - *திரு. இரா. அப்பு நடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் பேரூராட்சியில், திருவரம்பு, அம்பாங்காலை, பாடகசேரி, அஞ்சுகண்டறை போன்ற கிராமப் பகுதிகளில் உள்ள குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய ஒரு மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?